**திண்டுக்கல் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(12-09-2015 – 16-09-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 11-09-2015

**கடந்த கால வானிலை 08-09-2015 முதல் 10-09-2015 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 1.8 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 33-37 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 25 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 45-76 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 13-17 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 16-09-2015 - 8. 30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 12.09.15 | 13.09.15 | 14.09.15 | 15.09.15 | 16.09.15 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 2 | 3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36 | 36 | 36 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 59 | 58 | 59 | 60 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 50 | 49 | 48 | 49 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | மேற்கு தென்மேற்கு | மேற்கு தென்மேற்கு | மேற்கு தென்மேற்கு | மேற்கு தென்மேற்கு | மேற்கு தென்மேற்கு |

**குறுஞ்செய்தி :**

செம்டம்பர் 13 மற்றும் 14 தவிர, எதிர்வரும் ஐந்து நாட்களில், இலேசான தூறல் சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: பருத்தி, வாழை மற்றும் காய்கறிகள்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது எனவே மண் மற்றும் பயிரின் வளர்ச்சியை பொருத்து தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யலாம்.
- வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையைப் பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்யவும்.
- மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யலாம்.
- கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன் எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும்.
- வெண்டைக்காய், கத்திரிக்காய் மற்றும் தக்காளி போன்ற செடிகளில் நன்றாக கவனித்து அதில் தத்துப்பூச்சி பாதிப்பு காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த டைமீதோயேட் 30 EC @ 2 ml/liter தெளிக்கவும்.
- வெங்காயம் செடிகளில் இலைப்பேன்களைக் கட்டுப்படுத்த டைமீதோயேட் @ 0.06% or புரோப்னோபஸ் @ 0.05% தெளிக்கவும்.